1983 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அதைப்பற்றி குறிப்பிட்டு எழுதிக் கொடுத்தால் நான் 'ட்வாட்போர்டு' எம்.டி.க்கோ அல்லது இன்ஜினியருக்கோ அனுப்பி ஆவன செய்கிறேன்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்தை இரண்டு ஆண்டுகளாக ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அதனுடைய மதிப்பீட்டுத் தொகை என்ன? எந்த ஆண்டு அது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 334.32 லட்சம் என்று ஏற்கனவே சொன்னேன். கொஞ்சம் அதிகமான காலம் ஆகிறது என்றால், ஆழமாக பரிசீலனை செய்கிறோம் என்று பொருள்.

இளையான்குடி குடிநீர் திட்டம்.

*வினா எண் 130—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடி குடிநீர் திட்ட மதிப்பீடு மாற்றி அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) இளையான்குடி பேரூராட்சி மற்றும் ஜாகிர் உசேன் கல்லூரி வரையிலுள்ள கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதற்காக 54.80 லட்சம் செலவில் ஒரு திட்டத்திற்கு ஆகஸ்டு 82ல் அரசு நிர்வாக அனுமதி அளித்தது. 1979-80 ம் ஆண்டின் நிலையப் பட்டியல் வீதத்தில் திட்டம் போடப்பட்டதால் தற்போதைய நிலைகளின் படி மதிப்பீட்டை திருத்தி அமைக்க வேண்டி இருக்கிறது. திருத்திய மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இளையான்குடி குடிநீர் திட்டத்தோடு 16 கிராமங்களுக்கு குடிநீர் கொடுப்பதாகவும், அதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. எந்த எந்த கிராமங்கள் என்று பெயர்களைச் சொல்ல முடியுமா? அதோடு ஏன் இவ்வளவு நாள் தாமதித்து இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் தாமதம் என்பதிலே பல கசப்பான உண்மைகள் உள்ளன. அந்த பேரூராட்சிக்கு நிதி ஆதாரமே கிடையாது. எனவே கொடுக்க முடியாது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள அரசியல்வாதிகள் மற்றவர்கள் எல்லோரும் மிகவும் முயற்சி எடுத்து, நாங்கள் நிதி ஆதாரத்தைப் பெருக்குகிறோம் என்று அங்கிருந்து தகவல் வந்தது. அதற்கு மேல் இந்த திட்டம் உருவாக்கப்பட்டது. 1979-80 ஆண்டு அடிப்படையில். இப்போது 1983. எனவே மறு பரிசீலனை செய்து அதிகமான அளவு செலவாக இருந்தாலும், அந்த அடிப்படையில் குடிநீர் கொடுக்கலாம் என்ற அந்த நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் மறு பரிசீலனை செய்யப்படுகிறது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இளையான்குடிக்கு குடிநீர் கொடுப்பதிலே நீண்ட தாமதத்திற்கு காரணம் சொன்னார்கள். அந்தக் காரணம் நிச்சயமாக வரவேற்க வேண்டிய காரணம்தான். இருந்தபோதிலும் கூட இன்றைக்கு அது சாங்ஷன் ஆகி வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்தக் குறிப்பு இல்லையென்று நினைக்கிறேன். அந்த வேலைகள் நடந்து கொண்டு இருப்பதால் அந்த இளையான்குடிக்குப் பக்கத்திலே பரமக்குடியில் இ.இ. ஆபீஸ் இருக்கிறது பக்கத்திலுள்ள சிவகங்கையில் இ.இ. ஆபீஸ் இருக்கிறது. அந்த பேப்பர் சம்பந்தமாக விருதுநகருக்கு அனுப்பப்படுகிறது. அதை மாற்றி அமைத்து, பரமக்குடிக்கோ அல்லது சிவகங்கைக்கோ அனுப்பப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த் பேப்பரை எந்தெந்த ஆபீசுக்கு அனுப்ப வேண்டுமோ அந்தந்த அலுவலகத்திற்குத்தான் அனுப்ப வேண்டும் காரணம் காட்டி இந்த அலுவலகத்திற்குத்தான் அனுப்ப வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் பரிசீலனை செய்யலாம்.

சிவகாசி, திருத்தங்கல் நகரங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண் 31— திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி, திருத்தங்கல் நகரங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஆய்வு நடத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், வேலை தொடங்கப்படாததற்கு காரணங்கள் யாவை?

(இ) அத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த அரசு முன் வருமா?